மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1992). மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 12—2—1992)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன் இந்த பில்லுக்குள்ளேயே இருக்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன் வடிவை நான் இந்த இடத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சார்பாக வரவேற்கிறேன். காரணம், இன்று மொலாசஸ்—க்கு ஒரு வரிச் சலுகை அளித்து இதுவரை தமிழக அரசு இருந்த காரணத்தினாலே, இந்தத் தமிழக அரசு பல இலட்சக்கணக்கான ரூபாய் வருவாயை இழந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே மது விலக்குக் கொள்கையின் காரணமாக இன்று பல கோடி ரூபாயை இழந்து இன்று நிதி நெருக்கடியோடு போராடிக் கொண்

@31—3—1992-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

டிருக்கிற இந்தத் தமிழக அரசுக்கு இந்த மொலாசஸின் மீது இருக்கக்கூடிய வரிச் சலுகையை நீக்கி இன்று அதற்கும் வரி விதிக்கும் முகத்தான் நிச்சயமாகத் தமிழக அரசுக்குப் பல கோடி ரூபாய்க்கு வருமானம் நிச்சயமாக வரும் என்ற ஒரேயொரு காரணத்தினால் நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவை நாம் வரவேற்றாக வேண்டும். வரவேற்கிறோம் என்று சொல்லி, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஆதரவை நல்கி அமர்கிறேன். நன்றி; வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இல்லை.

பிற்பகல் 6-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் ; தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1992) நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) நிலக் கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான யக்ஞ) (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1992) ; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.